


07. 12. 2025

தலைப்புச் செய்திகள்

- தேச பாதுகாப்பில் முப்படையினரின் தன்னிகரற்ற தியாகத்திற்கு நாடு தலைவணங்குவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் தொழிலாளர்கள், விவசாயிகள், சிறு குறு வர்த்தகர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் கூறியுள்ளார்.
- தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கான 80 சதவிகித ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.
- 4) ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளது என்று மாநில ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.
- குவ்ஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் மிதுன் மஞ்சுநாத் – Sanskar Saraswat – ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

கொடிநாள்

தேச பாதுகாப்பில் முப்படையினரின் வீர தீரம் மற்றும் தன்னிகரற்ற தியாகத்திற்கு நாடு தலைவணங்குவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

முப்படையினரின் கொடிநாள் இன்று கடைபிடிக்கப் படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் துணிச்சல் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்றும் வீர வீராங்கனைகளுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்

நாட்டுமக்கள் அனைவரும் கொடிநாள் நிதி வழங்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதா கிருஷ்ணன் வெளியிட்ட செய்தியில் படைவீரர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக அனைவரும் கொடிநாள் நிதி வழங்குமாறு கூறினார்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட்ட செய்தியில் கொடிநாள் நிதிக்கு அனைவரும் தாராளமாக பங்களிக்க வேண்டுமென்றும் இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பிற்கான இவர்களின் தன்னலமற்ற தியாத்திற்கு வலு சேர்க்க முடியும் என்றார்.

கொடி நாளை ஒட்டி முப்படை தளபதி ஜென்ரல் அனில் சௌஹான் வெளியிட்ட செய்தியில் நாட்டின் ராணுவ தயார் நிலை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதில் முப்படையினர் உறுதியுடன் செயலாற்றி வருவதாக கூறினார்.

முப்படையினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

சேத பாதுகாப்பிற்காக பணியாற்றும் முப்படை வீரர்களுக்கு வணக்கம் செலுத்துவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

நாட்டின் சீருடை படையினரை கவுரவிக்கும் வகையில் 1949-ம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் 7-ம் தேதி கொடிநாள் கடைப்பிடிக்கப் படுகிறது.

தூத்துக்குடியில் கொடிநாளை ஒட்டி உலக போரில் இந்திய வீரர்களின் பங்களிப்பு குறித்த கண்காட்சி நடைபெற்றது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற கொடிநாள் நிகழ்ச்சியில் முன்னாள் படைவீரர்களுக்கான 25 லட்சம் ரூபாய்க்கான மூலதன மானிய உதவிகளை ஆட்சித்தலைவர் திருமதி. சிவ செந்தரவல்லி வழங்கினார்.

மாவட்டத்தில் 66 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் கொடிநாள் வசூல் பெறப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அரியலூர் மாவடடத்தில் 29 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 4 லட்சத்து 85 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

வந்தேமாதரம் தேசப்பாடாலின் 150-வது ஆண்டு கொண்டாட்டங்கள் தொடர்பான விவாதம் மக்களவையில் நாளை நடைபெறும் என நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி நண்பகல் 12 மணிக்கு இவ்விவாதத்தை தொடங்கிவைக்கிறார்.

முன்னதாக மக்களவை தலைவர் திரு.ஓம்.பிர்லா தலைமையில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் இதற்கான முடிவு எட்டப்பட்ட நிலையில் நாளை இந்த சிறப்பு விவாதம் இடம்பெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

அமெரிக்கா உடனான வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையில் இந்திய தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் சிறு குறு வர்த்தகர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வரும் புதன்கிழமை இருதரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைகள் தொடங்கவுள்ள நிலையில் இந்திய பொருட்களுக்கு அமெரிக்காவின் 50 சதவிகித வரி விதிப்பை குறைப்பது தொடர்பான விரிவான ஆலோசனைகள் இதில் மேற்கொள்ளப்படும் என தெரிகிறது.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய திரு. ஜெய்சங்கர், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினின் இந்திய வருகை, அமெரிக்கா உடனான வர்த்தக பேச்சுவார்த்தையை பாதிக்காது என தெளிவுபடுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

கோவா

கோவா உணவக தீ விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 25 ஆக அதிகரித்துள்ளது.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திரமோடி, உள்ளிட்டோர் இச்சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்சம் ரூபாயும்,

காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இண்டிகோ விமானம்

சென்னை, பெங்களுரு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படவிருந்த இண்டிகோ விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டது தொடர்பாக விளக்கம் கோரி

அந்நிறுவனத்திற்கு நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட ஆலோசனை கூட்டத்தில், பயணிகளுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள், இடையூறுகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இன்றிரவு 8 மணிக்குள் இண்டிகோ விமானத்தில் பயண முன்பதிவு செய்த அனைத்து பயணிகளுக்கு கட்டணத்தொகையை திருப்பி வழங்கவேண்டும் என்றும் அந்நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தை ஒருலட்சம் கோடி டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்டம் உத்தங்குடியில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் 63 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியஅவர், மாநிலத்தில் சீரான வளர்ச்சி, மாவட்டத்தில் பரவலான வளர்ச்சி என்ற அடிப்படையில் அரசு செயல்படுவதாக கூறினார்.

முன்னதாக மதுரையில் "தமிழ்நாடு வளர்கிறது" முதலீட்டாளர்கள் மாநாட்டை தொடங்கி வைத்து பேசியஅவர், விருதுநகர் மாவட்டத்தில் ஆயிரத்து 893 கோடி ரூபாய்

மதிப்பில் அமையவுள்ள PM மித்ரா ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவின் மூலம் ஒருலட்சம் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார்.

திருச்சியில் 868 கோடி ரூபாய் மதிப்பில், பெப்சிகோ இந்தியா நிறுவனம் உட்பட பல்வேறு மாவட்டங்களில் கணினி மென்பொருள், உணவு பதனிடுதல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொழில் வளர்ச்சிக்கான 91 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாக தெரிவித்தார்.

.. வாய்ஸ் ..

இவற்றின் மூலம் வேலைவாய்ப்புகள் உறுதி செய்யப்படுவதுடன் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.

முன்னதாக மதுரை மேலமடை சந்திப்பு பகுதியில் 150 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு முதலமைச்சர் திறந்து வைத்து, மேலூரில் சிப்காட் தொழில்பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖

மதிவேந்தன்

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் 854 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்பட்டுள்ள கூட்டு குடிநீர் திட்டம் இன்றும் ஒருமாதத்தில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என மாநில ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாரைக்கிணறு, மத்ருட் பகுதிகளைச் சேர்ந்த 105 விவசாயிகளுக்கு 11 கோடியே 60 லட்ச ரூபாய் மதிப்பிலான 113 ஏக்கர் நிலப்பட்டாக்களை இன்று வழங்கி பேசிய அமைச்சர், ராசிபுரத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் கட்டுமானப்பணிகள் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖❖

புதுக்கோட்டை வாய்ஸ்

புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு திருத்தப் படிவங்களில் 99 . 98 சதவிகிதம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. ராஜராஜன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் 37 பயனாளிகளுக்கு, 3 கோடியே 96 லட்ச ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக ஆட்சித் தலைவர் திருமதி. பொற்கொடி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பர நாதர் திருக்கோவில் கும்பாபிஷேகம் நாளை நடைபெற உள்ள நிலையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைகூட்டம்

ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் தலைமையில் இன்று நடைபெற்றது.

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டிவரும் நிலையில் அங்கு 5-வது நாளாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீட்டிக்கிறது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

குவ்ஹாட்டி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் இந்தியாவின் மிதுன் மஞ்சுநாத் – சக வீரரான Sanskar Saraswat - ஐயும்

மகளிர் ஒற்றையர் இறுதிப்போட்டியில் Tanvi Sharma – தைவானின் Ciou-Tong Tung - ஐயும் இன்று எதிர்கொள்கிறனர்.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

உலக கோப்பை ஆடவர் ஜூனியர் ஹாக்கி அரையிறுதியில் இந்தியா இன்று ஜெர்மனியை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖